நாளைய நலநாகரீக டிசைன்களை இன்றே தெரிவு செய்யுங்கள்
* தரமான ஜவுளி
* அளைத்து டிசைன் சாரிகள்
* பட்டு, வேட்டிகள், சேலைகள்
யாழ்நகரில் தலைசிறந்த ஜவுளி சமுத்திரம்
சீமாட்டி
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T'Phone: 24413

உதயன்
உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை
விலை ரூ-1/=

* அன்பளிப்புப் பொருட்கள்
* அலங்காரப் பொருட்கள்
Seematy (Fancy Goods)
158, Model Market, JAFFNA.
T'Phone: 24096

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸு கார்த்திகை மீ 23உ ஞாயிற்றுக்கிழமை ஹி ?ரி 1406 ற.அவ்வல் பிறை 25 (08-12-1985) UTHAYAN – A LIVELY TAMIL DAILY கதிர்:- 12

# இனப்பிரச்சினை: விரைவில் தீர்ப்பதற்கு இணக்கம்

## இன்று மீண்டும் சந்திப்பர்

புதுடில்லி, டிச. 7

இலங்கையின் இனப்பிரச்சினையை மிக விரைவில் நியாயமானமுறையில் தீர்த்து வைக்க வேண்டும் என்று இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தியும் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் இணங்கியுள்ளனர்.

அதன் பொருட்டு இருவரும் ஒருவருக்கு மற்றவர் உதவும் விதத்தில் நடந்து கொள்வது எனவும் உறுதி அளித்தனர்.

பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் இன்று (சனிக்கிழமை) தென் ஆசியப்பிராந்திய ஒத்துழைப்புச் சங்கத்தின் முதலாவது உச்சி மாநாடு நடைபெற்றது.

அந்த மாநாட்டின் உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளின் பின்னர் இந்தியப் பிரதமரும், இலங்கை ஜனாதிபதியும் தனியாகச் சந்தித்துப் பேசினர்.

அப்போதே அவர்கள் இலங்கையின் இனப்பிரச்சினையை விரைவில் தீர்த்து வைப்பதென இணக்கம் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரும் இன்றைய தினம் (சனிக்கிழமை) சந்தித்த போது காக்குள் பரஸ்பர விஷயங்களை பேசிக்கொண்டனர்.

இவர்கள் இன்று ஒரு மணித்தியால நேரம் சந்தித்துப் பேசுவார்கள் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் அவர்கள் 15 நிமிடங்கள் மட்டுமே பேசினர்.

அப்போது இலங்கையின் இனப்பிரச்சினை பற்றியே முக்கியமாக ஆராயப்பட்டதாக இங்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

மொழிவாரி மாநில சுயாட்சி கோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின்மாற்றுத்திட்டத்தை பிரதமர் ராஜீவ், திரு. ஜெயவர்த்தனவிடம் கையளித்ததாகவும் அறியப்படுகிறது.

அந்த மாற்று அறிக்கை குறித்து நாளை (ஞாயிறு) விபரமாக இரு தலைவர்களும் ஆராய்வார்கள் என்றும் அறியப்படுகிறது.

தமிழ்ப் போராளிகள் நடத்தி வரும் வன்செயல்களால் தமது நாட்டில் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை இலங்கை ஜனாதிபதி தெரிவித்தாராம்.

அதே வேளை இந்தியா வந்துள்ள இலங்கை அகதிகளால் தமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றி பிரதமர் ராஜீவ் பிரஸ்தாபித்ததாகவும் அறிய வருகிறது.


அவரைப் பற்றி இவர்


## தீர்க்கதரிசனமிக்க விவேகமான தலைவர்

டாக்கா, டிச 8

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தீர்க்கதரிசனமும், விவேகமும் மிக்க ஒரு பெரும் தலைவர்.

இப்படி புகழாரம் சூட்டினார் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்று ஆரம்பமான தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புச் சங்கத்தின் முதலாவது உச்சி மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது;–

தெற்காசிய நாடுகளிடையே முக்கியமானது இந்தியா.

பெரிய நாடு அது. ஏனைய எல்லா தெற்காசிய நாடுகள் ஒன்றுகச் சேர்க்கப்பட்டாலும் இந்தியா அதிலும் விடப் பெரிதாகும்.

தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியாவின் தலைமைத்துவம் முக்கியமானதாகும்.

தெற்காசிய நாடுகளுக்கு இடையில் நம்பிக்கையை உருவாக்குவதற்கு இந்தியா செயல் ரீதியாக பணியாற்ற வேண்டும்.

இந்த நாடுகளிடையே ஒரு குறிப்பிடத்தக்க தலைவர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி. தெற்காசிய நாடுகளுக்கு சரியான வழியைக் காட்ட வேண்டியவரும் அவரே.

அவர் மீது எமக்கு முழு நம்பிக்கை உண்டு.

எமது எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய அவர் தவறமாட்டார் என்பதையும்–

அவருக்கு பக்கபலமாக தெற்காசியநாடுகள் செயல்படும் என்பதையும் கூறவிரும்புகிறேன். அவர் தீர்க்கதரிசனமிக்க விவேகமுள்ள தலைவர்.

எமது நாடுகள் பலவற்றில் இன்று பயங்கரவாதம் தலைதூக்கியிருக்கிறது.

சிறுபான்மையினர் புறக்கணிக்கப்படுகின்றனர்கள் என்ற போர்வையில் பயங்கரவாதத் தலைவர்கள் தனிநாடு கோரிவருகின்றனர்கள்.

தெற்காசிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை வளம்பெறச் செய்ய ஒரே வழி அபிவிருத்தி தான்.

தெற்காசிய பிராந்திய நாடுகளிடையே முழு ஒத்துழைப்பை ஏற்படுத்தச் செய்வது அவசியமாகும்.

இப்படி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறினார்.

## தமிழ்ப் பகுதிகளை காப்பதற்கும் ஒரு பாதுகாப்பு நிதி

மட்டக்களப்பில் சுவரொட்டி

மட்டக்களப்பு, டிச. 8,

தமிழ் மக்கள் வாழும் பகுதிகளைப் பாதுகாப்பதற்கும் தேசிய பாதுகாப்பு நிதி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந்நிதியை ஆரம்பித்திருக்கிறது.

அரச பயங்கரவாதத்திலிருந்து தமிழ்ப் பகுதிகளையும், தமிழ் மக்களையும் மீட்கவே இப்பாதுகாப்பு நிதி ஆரம்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நிதிக்குத் தாராளமாக உதவும்படி தமிழ் மக்களைக் கோரும் சுவரொட்டிகள் நேற்று மட்டக்களப்பில் ஆங்காங்கே ஒட்டப்பட்டிருந்தன. அவை மிகவும் கவர்ச்சியாக இருந்தன.

## ரயில் கொள்ளையை நிறுத்துங்கள்

### பிரஜைகள் குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச.8

ரயில் கொள்ளையை நிறுத்தும்படி பருத்தித்துறை பிரஜைகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

அதன் விபரம் வருமாறு:–

யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவையை முற்றாக நிறுத்திவிட அரசு யோசிப்பதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. போராளிகள் தொடர்ச்சியாக ஏற்படுத்திவரும் நட்டமே இதற்கு காரணம் என்றும் கூறப்படுகிறது.

ரயில் சேவை நிறுத்தப்படும்போது கொழும்புக்கும் ஏனைய இடங்களுக்கும் பயணம் செய்வது பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

தனியார் பஸ் சேவை இரட்டிப்புப் பணம் பெற்று கொழும்புச் சேவையை நடத்துகின்றது.

தனியார்பஸ்சேவைக்கு கொள்ளை இலாபம் தேடித்தரவே இந்த உத்தேசம் என்ற வதந்தியும் பரவத்தான் செய்கிறது.

எது எப்படி இருப்பினும், ரயில்சேவை பாதிப்புற்றால் பெரும் பாதிப்பு ஏற்படும். எல்லாவற்றுக்கும் மேலாக பெரும் பாதிப்பைத் தரக்கூடிய வகையில்வடபகுதி இருட்டடிப்புச் செய்யப்படும்.

பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த பரிதாபக் கதையாக இது அமைந்துவிடும்.

எனவே, எவரும் ரயில் சேவையைப் பாதிக்கக்கூடிய எந்த நடவடிக்கையையும் எடுக்க வேண்டாமென தமிழ் மக்களின் நலனின் பெயரால் அனைவரையும் பணிவுடன் வேண்டுகிறோம்.

மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## ஜீ. சி. ஈ. பரீட்சை தடங்கலின்றி நடந்தது

நல்லூர் டிச. 8

நேற்று நடைபெற்ற ஜீ. சி. ஈ. பரீட்சை எதுவித தடங்கலுமின்றி நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

165 பரீட்சை நிலையங்களில் 25 ஆயிரம் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

பொதுமக்களும், இளைஞர்களும் இன்று கொடுத்த ஆதரவு போல் தொடர்ந்தும் வழங்க வேண்டும் என்று யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில்

## நுளம்புக் கடியால் மூளைக் காய்ச்சல் பரவும் அபாயம்

யாழ்ப்பாணம், டிச. 8

நுளம்புக் கடியினால் மூளைக்காய்ச்சல் பரவும் அபாயம் யாழ்ப்பாணத்தில் உள்ளது. இப்படி வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் ஏற்பட்ட பெருமழை, வெள்ளம் காரணமாகயாழ்ப்பாணக் குடா நாட்டில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது.

இதைத் தொடர்ந்து மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் தினமும் சேர்க்கப்பட்டு வருகின்றார்கள்.

பெரும்பாலோர் கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளைச் சேர்ந்தவர்களென்று தெரிகின்றது.

அவர்களின் இரத்தம் பரிசோதனை செய்யப்படுகின்றது.

நுளம்புக் கடியால் ஏற்படும் "செரி பிரல்" மலேரியா காய்ச்சல் அபாயம் உருவாகி இருப்பதாகக் கூறப்படுகின்றது

### துப்பாக்கி சூட்டு சத்தங்கள்

திருகோணமலை, டிச. 8

சனிக்கிழமை அதிகாலை திருகோணமலை, உப்புவெளிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

அன்புவழிபுரம் பகுதியில் இருந்து போராளிகள் சுட்டதாகவும் அபயபுர பகுதியில் காவலில் இருந்த ஊர்காவல் படையினர் திருப்பிச் சுட்டதாகவும் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் கூறின.

போராளிகள் பின்னர் ஓடிவிட்டனர் என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

## 10 இராணுவ வீரர் இஸ்ரவேலிலிருந்து நாடு திரும்பினர்

யாழ்ப்பாணம், டிச. 8

இஸ்ரவேலில் வைத்திய சிகிச்சை பெற்ற 10 இராணுவ வீரர்கள், சனிக்கிழமை காலை இலங்கை வந்து சேர்ந்தனர்.

போராளிகள் தாக்குதலில் பலத்த காயமடைந்த இந்த 10 இராணுவ வீரர்களும் இலங்கை அரசினால் சிகிச்சைக்காக இஸ்ரவேலுக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் இதனை 'இன்டியா குடே' என்ற சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிலும் கூறியிருந்தார்.

சுகமடைந்த இராணுவ வீரர்கள் சனி காலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கியபோது பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களை வரவேற்றனர்.

பூரண சுகமடைந்த பின்னர் மீண்டும் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று போராடத் தயாராக இருப்பதாக இவர்கள் விமான நிலையத்தில் வைத்துக் கூறினர்.

### சுபநேரம்

8-12-1985

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:
9.18முதல் –10.48வரை

ராகுகாலம்:
4.48முதல் – 6.18 வரை

ஏகாதசி விரதம்

### முச்சந்திமுரளி



என்ன யாழ்ப்பாணக் குடாநாட்டிலே இம்முறை "ஏ லெவல்" சோதினை முடிவு பெரிய விழுக்காடாம்.

தரப்படுத்தல் செய்த காலை தான் எங்கடை பெடியள் இந்தளவுக்கு உக்கிரமடைஞ்சவன்கள் எண்டதை மறந்து பிறகும் அந்த வேலை செய்யினமோ!

### வந்தாறுமூலையில் கொள்ளை

மட்டக்களப்பு, டிச. 8

வந்தாறுமூலை அரச மரக்கூட்டுத்தாபனத்தில் கொள்ளை.

ஆயுத பாணியாக வந்த இளைஞர்கள் மரக்கூட்டுத்தாபனத்தின் மரம் அரியும் இயந்திரத்தையும் சேர்த்து கொள்ளையடித்துச் சென்றார்கள்

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை நடந்தது.

லொறிகளில் வந்தவர்கள் அங்கிருந்த மரம் அரியும் இயந்திரம், மரப் பலகைகள் ஆகியவைகள் உட்படசுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துச் சென்றார்கள்.

## குண்டு வெடிப்பை அடுத்து கோட்டைக்குள் இருந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள்

யாழ்ப்பாணம், டிச. 8

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து, யாழ் கோட்டைப் பகுதியில் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. இதைத் தொடர்ந்து யாழ் நகரில் பரபரப்பு ஏற்பட்டது.

மக்கள் அகப்பட்ட வாகனங்களில் ஏறிச் சென்றனர். கடைகள் இழுத்து மூடப்பட்டன.

சனிக்கிழமை மாலை 7 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

அதே வெள்ளிக்கிழமை இரவு யாழ் பிரதான வீதியில் குண்டு ஒன்று வெடித்தது.

இதன் காரணமாக தமிழ் காங்கிரஸ் அலுவலகம் சிறு சேதமடைந்தது.

## ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவு வடக்கில் பெரும் விழுக்காடு!

### ஹாட்லி கல்லூரியில் மட்டும் 4 விசேஷ சித்தி

யாழ்ப்பாணம், டிச. 8

நேற்று வெளிவந்த ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் பெரும் விழுக்காடாகி உள்ளது.

சென்ற ஆண்டிலும் பார்க்க இம்முறை திறமைச் சித்தி (பி) பெற்றவர்கள் எண்ணிக்கை குறைவு என்று தெரிய வந்துள்ளது.

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி தொடர்ந்து இம்முறையும் சாதனையை நிலைநாட்டியுள்ளது.

தோற்றிய பாடசாலை மாணவர்களில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவனான செல்வன் சிதம்பரநாதன் 4 பாடங்களிலும் விசேஷ சித்தி (ஏ) பெற்றார்.

யாழ். குடா நாட்டிலேயே இவர் மட்டும் தான் 4 விசேஷ சித்திகளைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மூன்றுமாணவிகள் தலா ஒரு விசேஷ சித்தி பெற்றனர்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் ஒரு மாணவி இரண்டு விசேஷ சித்திகளையும் ஒரு மாணவி ஒரு விசேஷ சித்தியும் பெற்றார்கள்.

யாழ். இந்துக் கல்லூரியில் ஒரு மாணவன் 2 விசேஷ சித்திகளைப் பெற்றார்.

### கொள்ளை

திருகோணமலை, டிச. 8

சீனக்குடாவில் உள்ள தனியார் சிமெந்து தொழிற்சாலைக்குள் சனிக்கிழமை காலை இனந்தெரியாத நபர்கள் ஆயுதங்களுடன் புகுந்து கொள்ளை அடித்தனர்.

3 வாக்கி டோக்கிகள், 1500 ரூபா ரொக்கப் பணம், 4 டோர்ச் பட்டரிகள், பழையகோட்டுகள் முதலியன கொள்ளை அடிக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது.

### கண்காணிப்புக் குழு

கிளிநொச்சி, டிச. 8

போர் நிறுத்த கண்காணிப்புக் குழு நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விசாரணை நடத்தியது.

கிளிநொச்சி பிரஜைகள் குழு, பாதுகாப்புப் படை ஆகியவற்றின் அங்கத்தவர்கள் குழுமுன் சாட்சியமளித்தார்கள்.

அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள் பற்றியும், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்துமே விசாரணை நடைபெற்றது.

பல அம்சங்களினதும் பல்சுவை தரும்பும் குடும்ப வார இதழ்
சஞ்சீவி
உயிர் காக்கும் மருந்தேபோல் அறிவுக்கு உரமூட்டும் கருத்தோவியக் குவியல்
* * *
முற்றிலும் புதிய பாங்கில் புதுமைப் படைப்பு.
உதயனின் வார இதழ்
சஞ்சீவி
விரைவில் மலரும்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பிராந்திய நாடுகளிடையே நல்லுறவு அவசியம்

## 'சார்க்' உச்சிமாநாட்டில் பாரதப் பிரதமர்

டாக்கா, டிச, 7

**தெற்காசிய பிராந்திய நாடுகள் தம்முள் ஒத்துழைப்பை உருவாக்கிக் கொள்வதும், உறவை வளர்த்துக் கொள்வதும் பெரியதொரு தேவையாகும்.**

டாக்காவில் நடைபெறும் தெற்காசிய நாடுகள் பிராந்திய ஒத்துழைப்புச் சங்க உச்சிமாநாட்டில் உரையாற்றும் போது பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

பிரதமர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

சமாதானம், முன்னேற்றம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக இந்தநாடுகள் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன.

நெடுநோக்கும், அண்டை நாடுகளின் நிலையான உறுதிப்பாடும் இருக்க வேண்டும் என்ற கருத்து மேலும் வளர்ச்சியடைய வேண்டும்.

ஸ்தாபன அமைப்புக்குள் இந்த நாடுகள் இணைந்திருப்பது பரஸ்பரம் உருவாகக்கூடிய எதிர்கால நலன்களுக்கு நம்பிக்கையூட்டுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### நச்சுவாயுவுக்கு ஒருவர் பலி

புதுடில்லி, டிச. 7,

பழைய டில்லியில் இடம்பெற்ற அமிலக் கசிவு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் மரணமானார்.

இச் சம்பவம் தொடர்பாக அமிலக் கசிவு இடம்பெற்றதாகக் கூறப்படும் தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த 3 பேரை பொலீஸார் கைது செய்தனர்.

## உளவு விசாரணை இஸ்ரவேலிலும்

### அமெரிக்கா நடத்தும்

கொலம்பியா டிச. 7

அமெரிக்க இஸ்ரவேல் உளவு விவகாரம் தொடர்பான விசாரணைகளை அமெரிக்கா இஸ்ரவேலிலும் மேற்கொள்ளும்.

இந்த விசாரணையின் போது இஸ்ரவேலின் முன்னாள் பிரதமர் மெனச்செம் பெகினின் பயங்கரவாத ஒழிப்பு ஆலோசகராக இருந்த ரபீல் எயித்ரான் என்பவரும் விசாரிக்கப்படுவார். பிரசாரப்படுத்தப்படாத இஸ்ரவேலின் இரகசிய பிரிவொன்றுக்கு இவர் தலைவராக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

உளவு விவகாரம் தொடர்பான விசாரணைகளை ஒரு நாடு குற்றச்சாட்டுக்கு இலக்கான நாட்டிலும் மேற்கொள்ள இடங்கொடுத்தது உளவு துறை விசாரணை வரலாற்றில் இதுவே முதற் சம்பவம் என்று செய்தி குறிப்புகள் கூறுகின்றன.

இஸ்ரவேல் பெருந் தகுதிக்குரிய தனது கூட்டாளியை பகைத்துக் கொள்ளமுடியாது அபிப்பிராய பேதங்களுக்கும் ஒட்டுப்போட்டு மாளிக்க வேஅது விரும்புவதையே இது பிரதிபலிப்பதாகவும் விமர்சிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அமெரிக்கா இந்த நாட்டுக்கு வருடந்தோறும் பல கோடி டாலர்களை உதவியாக வழங்கி வருவதும் சுட்டிக்காட்டப்பட்டது.

விசாரணையில் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களை தண்டிக்குமெனவும் அதற்குப் பொறுப்பாகவிருந்த பிரிவு கலைக்கப்படுமெனவும் இஸ்ரவேல் உறுதியளித்துள்ளது.

அமெரிக்க செயலாளர் ஜோர்ஜ் ஷூல்ட்ஸ் விசாரணைபற்றிய விபரங்களைத் தெரிவிக்க மறுத்து விட்டார்.

எனினும் இஸ்ரவேலின் மன்னிப்புக் கடிதம் பற்றிக் கூறியபொழுது அது ஒரு வெறும் மன்னிப்புக்கடிதம்மட்டுமல்ல என்று தெரிவித்தார்.

அமெரிக்க அமைப்பு நாடுகளின் கூட்டத்திற் கலந்துகொள்ள கொலம்பியா சென்றிருந்த போது அங்கு நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

இஸ்ரவேலின் மன்னிப்புக் கடிதத்தைப்பற்றி அவர் அங்கு மேலும் கூறியபொழுது: இதில் குழப்பமான வாசகங்கள் எதுவுமில்லை. எந்த அளவுக்கு நிலைமை சென்றாலும் விவகாரத்தின் கடைசிக் கட்டம்வரை விசாரணைகளை மேற்கொள்ள இது சம்மதமளிக்கிறது. அதை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம் என்றார்.

அமெரிக்காவின் ஆத்திரத்தை கிளப்பிவிட்டிருந்த இந்த சம்பவம் அமெரிக்க புலனாய்வு நிறுவனத்தால் விசாரணை செய்யப்படும்.

## மகாபலிபுரம் சிற்பங்களும் இடம்பெறும்

புதுடில்லி, டிச. 7

உலக பாரம்பரிய நினைவுச் சின்னங்கள் பட்டியலில் மகாபலிபுரம் சிற்பங்களும் இடம் பெறுகின்றன.

இந்த பட்டியலில் இடம் பெறுவதற்காக இந்தியா 25 நினைவுச் சின்னங்களைத் தெரிவு செய்து அனுப்பியது.

ஆறு சின்னங்களையே உலக பாரம்பரிய சின்னங்கள் பட்டியல் தயாரிப்புக்குழு ஏற்றுள்ளது.

1. தாஜ்மஹால்
2. ஆக்ராக்கோட்டை
3. அஜந்தா,குகை
4. சூரியன்கோவில்—கோனார்க்
5. மகாபலிபுரம் சிற்பங்கள்
6. எலாரா குகை

இத்தகவலை மனிதவள அபிவிருத்தி அமைச்சர் திரு பி. வி. நரசிம்மராவ் இந்திய நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

## செய்யாறு இடைத் தேர்தல்

வேலூர், டிச. 7

தமிழ் நாட்டில் உள்ள செய்யாறு சட்டசபைத் தொகுதியின் இடைத் தேர்தல் டிசம்பர் 16ஆம் திகதி இடம்பெறும்.

இத் தொகுதியின் எம் எல் ஏ ஆக இருந்தவர் அண்ணா தி.மு.கவைச் சேர்ந்த திரு. கே. முருகன்.

## யுனெஸ்கோவிலிருந்து பிரிட்டன் விலகியது

லண்டன், டிச 7

பிரிட்டன், யுனெஸ்கோ ஸ்தாபனத்திலிருந்து விலகிக்கொண்டதாக அறிவித்துள்ளது.

தனது விலகல் பற்றிய விடயத்தை உத்தியோகபூர்வமாக அறிவித்து விட்டதாகவும் உறுதிப்படுத்தியுள்ளது.

யுனெஸ்கோ அமைப்பு அதிக தீங்குபயக்கக் கூடிய அளவுக்கு அரசியல் மயப்படுத்தப் பட்டு விட்டது விண் விரயங்களை அந்த நிறுவனத்தில் எஞ்சியுள்ளன. பயனற்ற ஒன்றாக அது பழுதடைந்து விட்டது.

மேற்கண்ட விடயங்களைத் தனது விலகலுக்குரிய காரணங்களாக பிரிட்டன் தெரிவித்து உள்ளது.

## பாகிஸ்தானுக்கு ஜின்னா இல்லம் கொடுபடாது

பம்பாய் டிச. 7

'ஜின்னா இல்ல' த்தை வாடகைக்குத் தர முடியாது என்று இந்தியா, பாகிஸ்தானுக்கு அறிவித்துள்ளது.

பம்பாய் பலபார் மலைப் பகுதியில் 'ஜின்னா இல்லம்' என்ற மாளிகை உள்ளது.

## ஆதி வாசிகளுக்கு புகையில்லா நெருப்பு அடுப்புகள் அறிமுகம்

### டில்லி நிபுணர்கள் வடிவமைப்பு

பாலக்காடு டிச. 7

நெருப்பு இன்றி புகையாது.

இது அனுபவ மொழி. ஆனால், நெருப்பு இருக்கும். புகை வராது.

இது புது மொழி. இந்தியாவில் புதிய அடுப்பு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

அமைதி பள்ளத்தாக்கில் உள்ள ஆதிவாசிகள் மத்தியில் புகையில்லாமல் எரியும் அடுப்புகள் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டன.

இக் கிராமங்களுக்கு பிரதமர் ராஜீவ் காந்தி அண்மையில் விஜயம் செய்திருந்தார். அதைத் தொடர்ந்தே, புகை வராமல் எரியும் மரத்தைப் பாவிக்கக்கூடியதாக இந்த அடுப்புகள் இரண்டு டெல்லி நிபுணர்களின் மேற்பார்வையில் செய்யப் பட்டன.

ஆதிவாசிக் குடிசைகள், காற்றோட்டமில்லாதவை. புகை வரும் அடுப்புகளைப் பாவித்து மக்கள் கஷ்டப்படுவதைப் பார்த்தார் பிரதமர் ராஜீவ். அதன் பின்னர் புகைவராமல் எரியும் அடுப்பு தயாரானது.

## வெளி உலகில்

## விஞ்ஞானம் பற்றி திரிக்கப்பட்ட கருத்தே மனித இனத்தின் நஞ்சு

### பகவான் சாயிபாபா கூறுகிறார்

பிரசாந்தி நிலையம் டிச. 7

விஞ்ஞானம் பற்றிய திரிக்கப்பட்ட கருத்துக்களே மனித இனத்துக்கு இன்று நஞ்சு ஆக விளங்குகின்றது. அந்த நஞ்சு தான் இன்று உலகையும் பிடித்துள்ளது.

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா, ஸ்ரீ சத்தியசாயி பல்கலைக்கழகத்தில் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

பல்கலைக்கழக வேந்தர் என்றமுறையில் பகவான் பாபா பேசினார்.

பகவான்பாபா மேலும் சொன்னதாவது:

ஆத்மீகத்துடன் விஞ்ஞானம் இணைந்து செயல்பட வேண்டும். சூழலைப் பழுதாக்க அமெரிக்கா நட்சத்திரப் போர்த் திட்டத்தின் மூலம் முயற்சிக்கின்றது.

உலகில் எல்லா நாடுகளும் சமாதானத்தையே விரும்புவதாகக் கூறினாலும், பெரும்பாலான அணு ஆயுதங்களாகக் குவித்துக் கொண்டே இருக்கின்றன.

விஞ்ஞானம், தொழில் நுட்பம் வளர்ச்சி அடைவதை நான் எதிர்க்கவில்லை. அவற்றை அழிவுக்கு பயன்படுத்துவதையே எதிர்க்கின்றேன்.

இப்படி பகவான்பாபா சொன்னார்.

# தமிழ்- முஸ்லிம் ஒற்றுமை வலுப்பெற வேண்டும்

## அம்பாறை அபி. சபை

### முன்னாள் உறுப்பினர் கூறுகிறார்

அம்பாறை, டிச. 8

"போராட்டம் நடக்கிறது, சமாதானப் பேச்சுவார்த்தைகளும் நடைபெறுகின்றன. அதே வேளை மூன்றாவது சக்தி ஒன்று தமிழ், முஸ்லிம் மக்களை மூட்டி, மோதவைத்து வேடிக்கை பார்க்க முனைந்துள்ளது. எனவே தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமை வலுப் பெறவேண்டும்".

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சபையின் முன்னாள் உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான திரு. ஆ. கந்தையா வேல்முருக மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் பிரிவிலுள்ள சில தமிழ்,முஸ்லிம் கிராமங்களுக்கிடையே நிலவிய பதற்ற நிலையைத் தொடர்ந்து, ஏற்பாடு செய்யப்பட்ட சமாதானக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் திரு. நிமால் மகுருஸ் தலைமையில், கல்முனை பொது நூலக கேட்போர் கூட்டத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

கல்முனை, நிந்தவூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் கிராமங்களிலிருந்து வந்த பிரமுகர்கள், கோயில் தர்மகர்த்தாக்கள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள் முதலானோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திரு. கந்தையா வேல்முருகு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"தமிழ் மக்களும், முஸ்லிம்களும் நீண்டகாலமாக எமது பிரதேசங்களில் இணைந்து வாழ்ந்து வருபவர்கள்.

நாம் உள்ளத் தூய்மையுடன் சமாதானம் பேண வேண்டும். அழகாக, மேடை அலங்காரங்களுக்காகப் பேசிவிட்டுச் செல்வதில் அர்த்தமில்லை, இருபக்கமும் மனம் திறந்து பேசி நிரந்தரத் தீர்வுகளைக் காண வேண்டும் என்றார்.

மனித உயிர்களைத் துச்சமாக நினைத்து ஆள் கடத்தல், கொலை செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவது மனிதாபிமானமற்ற செயல் எனவும் அவர் கண்டித்துப் பேசினார்.

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் ஜனாப். ஏ. ஆர். முகம்மது அலி பேசுகையில்;

"இங்கு வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் என்றும் ஒன்றாகவே வாழ வேண்டியவர்கள். சில புல்லுருவிகளின் கைங்கரியங்களால் எம்மிடையே ஒற்றுமைக்குலைவை நாம் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்று தெரிவித்தார்.

காரைதீவு உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகஸ்தரும், கோயில் தர்மகர்த்தாவுமான திரு. எஸ். தெய்வநாயகமும் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

கூட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்களிடையே நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்குடன் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## இன்று

நாகர்கோவில், டிச 8

குடத்தனை ரே. க. த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் இன்று (ஞாயிறு) மாலை 4.00மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. நோ. செபமாலை தலைமையில் நடைபெறும்.

செயலாளர் திரு. வ. சிவலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

★

கொக்குவில், டிச 8

சங்கிலியன் அகதிகள் முகாமில் உள்ளோருக்கு யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் குழு உணவுப் பொட்டலங்களை இன்று வழங்கும்.

## கமலின் திறமையை புகழ்கிறார் மனோகர்

பிரபல நாடக, சினிமா நடிகர் ஆர் .எஸ். மனோகர். இவர் காதல் இளவரசன் கமலஹாசனைப் பற்றிப் பெருமை படச் சொல்கிறார்.

அவர் சொல்கிறார்:

இளைய தலைமுறை நட்சத்திரங்களில் ஒருவரான கமலஹாசனைகடந்த இருபது வருடங்களாகத் தொடர்ந்து கவனித்து வருகிறேன்.

கமல் ஏழு வயதுச் சிறுவனாக இருந்த போது டி. கே. எஸ் குழுவினரின் "அப்பாவின் ஆசை" நாடகத்தில் நடித்தார். பார்த்திருக்கிறேன்.

அன்றிலிருந்து ஒவ்வொரு விநாடியும் வெற்றிப் படியில் ஏறி, இன்று இந்தியா முழுவதும் ரசிகர்களால் அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய "ஆல் இந்தியா ஸ்டார்" ஆகியிருப்பது நமக்கெல்லாம் பெருமை தரக் கூடிய விஷயம்.

கமலுடன் "சங்கர்லால்" "அலாவுதீனும் அற்புத விளக்கும்" போன்ற படங்களில் சேர்ந்து நடித்திருக்கின்றேன்.

அந்தக் காலத்து சினிமா அனுபவங்களைப் பற்றி அவர் ஆர்வத்துடன் கேட்பார்.

சண்டைக் காட்சிகளில் ஸ்டைல் செய்து கெமரா கோணத்துக்கு ஏற்றபடி பலத்தைப் பிரயோகிக்காமல் நடிப்பது ஒரு அபூர்வமான ஆர்ட். இதைக் கமல் நன்றாக அறிந்து கொண்டிருக்கிறார்.

நான் பல படங்களில் மக்கள் திலகம் எம் ஜி. ஆருடன் சண்டைக் காட்சிகளில் நடித்திருக்கிறேன். அவரது படங்களில் கிடைத்த "ஸ்டண்ட் எபெக்ட்" வேறு யாருக்கும் கிடைத்ததில்லை.

ஆனால் கமலஹாசனோ எப்படியோ இந்த அபூர்வமான ஸ்டண்ட்களை நாளடைவில் தன்னிடம் வளர்த்துக் கொண்டு, என்னுடன் நடித்த போது அசந்து போய் விட்டேன்.

நான் இந்த வயதிலும் உடற்பயிற்சி செய்வதை ஆர்வத்துடன் பார்த்த கமல், அது பற்றி சில விளக்கங்களைக் கேட்டார்.

"ஹீரோ என்பவர் ஸ்லிம்மாக இருக்கணும். அப்போதுதான் அவரிடம் பலமிருக்கும். வெயிட்லிஃப்ட் செய்யாதே" என்று புத்திமதி சொன்னேன். ஏற்றுக் கொண்டார்.

இப்படி மனோகர் சொன்னார்.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

### பிதா சிங்கராயரின்

# ஒழுங்குமிகு வாழ்வுக்கு தலைவணங்குகிறேன்

## சிரேஷ்ட அரச சட்டத்தரணி சி. ஆர். டி. சில்வா மரியாதை

கொழும்பு, டிச. 8

வண பிதா ஆபரணம் சிங்கராயர் ஒரு ஒழுங்கு முறையான வாழ்க்கை வாழ்பவர். அவருக்கு நான் தலைவணங்குகின்றேன். இல்லாவிடில் நான் எனது கடமையில் இருந்து தவறியவனாவேன்.

இப்படி சிரேஷ்ட அரச சட்டத்தரணி திரு. சி. ஆர். டி. சில்வா சொன்னார்.

நீர்வேலி வங்கிக்கொள்ளைச் சம்பவம் பற்றித் தகவல் தெரிந்தும் பொலீஸுக்குச்சொல்லத் தவறியது என்று வண பிதா சிங்கராயர் மீது குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி திரு. சி. ஆர். டி. சில்வா, தொகுப்புரை நிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அரச தரப்புச் சட்டத்தரணி திரு. டீ. சில்வா, நீர்வேலி பணம் பற்றிக் கூறிய போது, மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யு. சேனநாயகா சொன்னதாவது;

"சட்டவிரோதமான வழியாக நீர்வேலிப் பணமான பதினொன்றரை லட்சம் ரூபா கிடைத்தது என்பதற்குச் சாட்சியங்கள் இல்லை.

"இப்பணத்தைப் பற்றி, பயமுறுத்தல் காரணமாக அளிக்கப்பட்டதாகக் கூறப்படும் வண பிதா சிங்கராயரின் வாக்குமூலத்தைத்' தவிர வேறு எந்தச் சாட்சியமும் கிடையாது."

விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

### விடுவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், டிச 8

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கடத்தப்பட்ட புளியங்குளம் உதவி அஞ்சல் அதிபரும் அவரது மருமகனும் புதன்கிழமை பிற்பகல் விடுதலை செய்யப்பட்டனர்.

## காரைநகரில் உதவிப்பணம்

காரைநகர், டிச. 8

மலசலகூட உதவிப் பணம் பெறுவதற்கு கடந்த வருடம் விண்ணப்பஞ் செய்து தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

காரைநகர் கிழக்கு மோந்திபுலம், இடைப்பட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக விண்ணப்பித்த 10 பேருக்கு தலா 250 ரூபா வீதம் மொத்தம் 2,500 ரூபா சுகாதாரத் திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

## தேவதாசனுக்கு கௌரவம்

யாழ்ப்பாணம் டிச 8

தென்மோடி நாட்டுக் கூத்தை மேடையேற்றிய கவிஞர் தேவதாசன், பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்ச்சி டிசம்பர் 8ம் திகதி இடம் பெற்றது.

யாழ் மறை மாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய தியோகுப்பிள்ளை ஆண்டகை கவிஞருக்கு பொன்னாடை போர்த்தினார்.

## சமாதானசபை அரும்பணி

வட்டுக்கோட்டை, டிச8

சங்கானை மேற்கு கிராம சேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த சமாதான சபையினர் அப்பகுதி மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளையும் சுமுகமான முறையில் தீர்த்துவருகின்றனர்.

இச் சபை ஞாயிறு தோறும் இருவாரங்களுக்கொரு முறை விசாரணை நடத்திவருகின்றது.


**A.A.T.**

**(London Exam)**

**(Association of Accounting Technicians)**

**யாழ்நகரிலே**

முதன் முறையாக ஆரம்பமாகியுள்ளது

**INTER - PRELIM வகுப்புகள்**

I.C.M.A. பயில முடியாதவர்களுக்கும்
ஓர் அரிய சந்தர்ப்பம்!
A.A.T. மூலம் I.C.M.A. பயில
சந்தர்ப்பம் உண்டு

அதேவேளையில்—
(A) INTERMEDIATE (ii) FINAL
இரண்டும் சித்தியடைந்தவர்கட்கு பின்வரும் லண்டன் சோதனைகளில் விதிவிலக்கு (Exemption) வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

I.C.M.A. — Section A
A.C.C.A. — Level I
London Chartered-Foundation Stage

உடன் தொடர்பு கொள்ளுங்கள்:

**North Ceylon Technical Institute**

14, St. Peter's Lane,
Hospital Road (Opp.O.L.R.Church)
JAFFNA
T'Phone: 24355

### உதய சங்கல்பம்

நூறு நாம் கேட்டாலும் கூடத் தன் கையில் உள்ளதைக் கொடுக்க மறுக்கும் குழந்தை மற்றொருவருக்குக் கேட்ட மாத்திரத்திலேயே கொடுத்து விடலாம். அதுபோன்றே ஆண்டவன் அருளும் எவ்விதக் கட்டுப்பாடும் அற்றதாக உளது.

- அன்னை சாரதாதேவி -


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22078 8-12-85 த. பெ. 23


## விடிவு பிறப்பதற்கு குடியியல் உணர்வு தேவை

மூளைக் காய்ச்சல் பத்துப் பேரை பலி கொண்டு விட்டது. இது நடந்தது அனுராதபுரத்தில். ஆயினும் மூளைக்காய்ச்சல் யாழ்ப்பாணத்து மக்களை தாக்காது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

மூளைக்காய்ச்சல் என்பது மலேரியாக் காய்ச்சல்களில் ஒரு வகை. அதற்கு மூல காரணம் முழுக்க முழுக்க நுளம்புக்கடி. மெதுவாக வந்து மேனியில் இருந்து கடித்து விட்டுப் போகும் நுளம்பு எவ்வளவு ஆபத்தானது என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

1984-ம் ஆண்டில் தமிழ்ப் பகுதிகளையும் இந்த மூளைக்காய்ச்சல் அபாயம் எதிர்நோக்கியிருந்தது. முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பலர் மூளைக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். இப்பொழுதும் அந்தப் பகுதிகளிலிருந்து பலர் மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற வந்திருக்கிறார்கள். அவர்களைப் பாதித்திருப்பது மூளைக்காய்ச்சல் தானா என்பதை அறிவதற்காக இரத்தம் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

நுளம்பின் அபாயம் தமிழ்ப் பகுதிகளிலும் உண்டு என்பதை இது காட்டுகிறது. குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் நுளம்புத் தொல்லை குறைவு என்று சொல்வதற்கில்லை. கிராமம், நகரம் என்ற இட வேறுபாடின்றி, கார்காலம், கோடைகாலம் என்ற பருவகால வேறுபாடின்றி நுளம்பு இரவு பகல் எல்லாம் ''படையெடுத்து''த் தாக்குகிறது.

காட்டுப் பிரதேசங்களில் நுளம்பு பெருகுவதைப் புரிந்து கொள்ளலாம். அவற்றை அண்டி வாழும் குடியேற்ற வாசிகள் அதனால் பாதிக்கப்பட்டு, அபாயகரமான நோயினால் கஷ்டப்படுவதும் வழக்கம். மலேரியா தடுப்பு இயக்கம் என்ற தனியான அரச பிரிவு ஒன்று இருக்கிறது. ஆனால் அது தமிழ்ப் பகுதிகளில் இயங்குகிறதோ என்று மிகப் பெரிய கேள்விக் குறியைப் போட வேண்டிய நிலை.

பல தமிழர்கள் அநியாயமாக மரணமாகும் இக்காலத்தில், எங்களை நோய் நொடியில் இருந்து காப்பாற்ற வெளியார் எவரும் உதவுவர் என்று எதிர்பார்க்கலாகாது. தன் கையே தனக்கு உதவி. நோய் வந்து உயிர் ஆபத்து ஏற்படுவதற்கு முன்னர் நாமே நோய் தடுப்பு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

எமக்கு அந்த உணர்வும், பொறுப்பும் இருக்கிறதா? நுளம்பின் உற்பத்திச்சாலைகள் குப்பை கூளமும், சேறும் சகதியும். இவற்றை எமது வீட்டில் மட்டுமன்றி சுற்றுடலிலும் தவிர்க்க வேண்டும் என்ற பெருநோக்கு நம்மில் எத்தனை பேருக்கு உண்டு.?

தமது வீட்டையும் வளவையும் கூட்டிப் பெருக்கித் துப்புரவாக இருக்க வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் எமது வீட்டுக் குப்பையை அயலவரின் வளவுக்குள்ளோ அல்லது வீதி முகப்பிலோ கொட்டுவதால் எங்களுக்கும் சுகாதாரக் கேடு என்பதை எல்லோரும் உணருகிறோமா? இல்லை.

தமிழர் சமுதாயம் கல்வி அறிவுடைய சமூகம் எனப் பெருமை பேசுகிறோம். ஆனால் எமது வீட்டை மட்டுமன்றி அதன் சுற்றுடலையும் சுகாதாரமாக வைத்திருக்க வேண்டும் என்பதை நினைக்கத் தவறிவிடுகிறோம். குடியியல் உணர்வு எம்மிடம் கிஞ்சிதமும் இல்லையே!

நாம் அரசியலில் விடிவு கண்டுவிட்டால் மட்டும் போதாது. பொருளாதாரத்தில், சமூக நடைமுறைகளில் விடிவு தேவை. தானும் வாழ்ந்து, தன் அயலவனும், தன் ஊரும், தன் பிரதேசமும், தன் நாடும் வாழ வேண்டும் என்ற பரந்த மனநிலை அவசியம்.

அப்போதுதான் எமக்கு எல்லாத்துறைகளிலும் சகல வகைகளிலும் விடிவு பிறக்கும்.

## திருமலை அரச ஊழியருக்கு விசேஷ கொடுப்பனவு

திருகோணமலை, டிச 8

மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் சேவையாற்றிய திருகோணமலை அரச ஊழியர்களுக்கு விசேஷ கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபையின் மூன்று உறுப்பினர்களான ஜனாப் எம். எச். ஏ. ரஹீம், மூதூர் எம்.பி, ஜனாப் எம்.இ.எச். மஹ்ரூப, திருமலை மாவட்ட அமைச்சர் திரு. எச். ஜீ. பி. நெல்ஸன் ஆகியோர் அடங்கிய கூட்டத்தில் இது சம்பந்தமான பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டது.

ஜனாப் மஹ்ரூப் பிரேரணையைக் கொண்டு வந்தார். திரு. நெல்ஸன் வழி மொழிந்தார்.

# எமக்கு இராஜதந்திர அந்தஸ்துதரவேண்டும்

## இந்தியாவிடம் உமா கேட்கிறார்

திரு. பார்த்தசாரதி வந்து பேசிப்பார்த்தார், ஜெயவர்த்தன கேட்டதாக இல்லை. பார்த்தசாரதி தமிழர். அவரை வேண்டாம் என்று ஜெயவர்த்தன சொல்லிவிட்டார்.

பின்னர் பண்டாரிவந்தார். அவரும் பேசிப் பார்க்கிறார். சாதகமான முடிவுகள் எதுவும் வெளி வருவதாக இல்லை.

பண்டாரி சொல்வதையும் ஜெயவர்த்தன கேட்பதாக இல்லை.

தமிழர்களுக்கு ஓரளவு சுயாட்சியைக் கொடுக்கக்கூடிய பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்தவர் அல்லவா ஜெயவர்த்தன?

அதற்காக புத்தபிக்குகளையுங்கூட்டிக்கொண்டு 1958இல் கொழும்பில் இருந்து கண்டிக்குப் பாதயாத்திரை போனவர்தானே இந்த ஜெயவர்த்தன!

இப்படி தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் செயலதிபர் திரு. க. உமாமகேஸ்வரன் 'புரொன்ட்லைன்' இந்திய சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

''தடைக்கல்லை அகற்றுவதில் இந்தியாவின் உதவிகள் ஓரளவு உதவியுள்ளதாகக் கருதப்படுகின்றதே. கடந்த சில மாதங்களில் இந்தியாவின் கொள்கை மாறிவிட்டது என்று எண்ணுகிறீர்களா?'' என்ற கேள்விக்கே திரு. உமாமகேஸ்வரன் மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

பேட்டி விவரம் வருமாறு:-

கேள்வி: இப்பொழுது முட்டுக்கட்டை நிலவுவதாகக்கருதப்படுகின்றது. அடிப்படைப் பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்களில் முன்னேற்றமே காணப்படாத நிலை தெரிகின்றது. யுத்த நிறுத்த அமுல் மீறப்படுகின்றது. உங்கள் போராட்டங்களின் எதிர்காலம் எப்படி உள்ளது? என்ன பணிகள் முன்னே உள்ளன?

பதில்: தமிழ் அமைப்புக்கள் இடையே ஒற்றுமை நிலவவேண்டும். இதுதான் எம் முன்னே உள்ள பெரும்பணி.

ஐக்கியப்பட்ட இராணுவ நடவடிக்கைதான் இன்று எமக்குத் தேவை.

சரியான அரசியல் விளக்கங்களின் அடிப்படையில்தான் அது சாத்தியமாகும்.

இதற்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது, சில அமைப்புக்கள் தாக்கிவிட்டு ஓடும் உபாயத்தில் தங்கிஇருப்பதே. இந்த மாதிரியான தாக்குதல்கள் ஸ்தம்பித நிலைக்கு வந்துவிட்டன. எம்மை நாமே தோற்கடிக்கும் நிலையை ஏற்படுத்துகின்றது.

மக்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்ப ஆரம்பத்தில் தாக்கிவிட்டு ஓடும் உபாயம் தேவைப்பட்டது.

பொலிஸ் நிலையங்களை முதலில் தாக்கியது எமது இயக்கந்தான்.

1981இல் அனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தைத் தாக்கினோம்.

இன்றைய நிலையில் எமக்குத் தமிழ்மக்களின் ஆதரவு உண்டு. ஆகவே தாக்கிவிட்டு ஓடும் உபாயம் தேவை இல்லை.

நாம் எமது போராட்டம்பற்றி சிங்கள மக்கள் அறிந்துகொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கேள்வி: தாக்கிவிட்டு ஓடும் தந்திரம் பலன் அளிக்கவில்லைஎன்று கூறுகிறீர்கள்?

பதில்: நாம் ஒரு இனவாத அரசை எதிர்த்துப் போராடுகின்றோம்.

இராணுவம் தமிழர்களுக்குச் சொந்தமானது அல்ல. 99 சத விதமானோர் சிங்களவர்கள்.

சில இடங்களில் தாக்குதல் நடத்திவிட்டு ஓடினால் இராணுவம் வந்து அப்பகுதி மக்களையே கொலை செய்துவிடுகின்றது.

கேள்வி: போராளிகளின் தாக்குதல்களினால் இராணுவத்தின் பதில் தாக்குதல்கள் ஏற்படுகின்றன. இதனால் தமிழ்க் குடிகள்தான் கஷ்டப்படுகிறார்களா?

பதில்: ஆம். தமிழ்மக்களைப் பாதுகாக்கக்கூடிய நிலையில் நாம் இல்லை. குறிப்பாக எமது பிரதேசத்தில் – தமிழ் ஈழத்தில் உள்ள தளங்களை நாம் இழந்துவருகின்றோம்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை.

இப்படியான தாக்குதல்களினால் இப்பகுதிகளில் இருந்து தமிழ மக்கள் விரட்டப்படுகின்றார்கள். இராணுவம் எல்லைப்புறத்தை அடைகின்றது.

கேள்வி: பின்னர் எப்படியான இராணுவ நடவடிக்கை இருக்கவேண்டும்?

பதில்: நல்லது நாம் மக்கள் இராணுவம் ஒன்றைத் தயார் செய்ய வேண்டும்.

போராட்டம் ஒன்றில் எப்படி எம்மைப் பாதுகாத்துக்கொள்வது என்பதுபற்றி மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

பேருட்டில்நிலவும்நிலை இலங்கையிலும் உருவாகத் தொடங்கியுள்ளது.

ஆகாயத்தில் இருந்து மக்கள் தாக்கப்படும் ஆபத்துத்தான் அது.

பேருட்டில் உள்ள மக்கள் போன்று, ஆகாசத் தாக்குதல் இடம்பெற்றால் நிலத்தில் தோண்டப்படும் குழிகளுக்குள் எப்படிப் பதுங்கி, பாதுகாத்துக் கொள்வது என்பதுபற்றி நமது மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

கேள்வி: உங்களுடைய இராணுவ நடவடிக்கை முக்கியமாக தற்பாது காப்புத்தான்.

பதில்: ஆம் ஒரு பிரதேசத்தைப் பாதுகாக்கக் கூடிய சக்தி எமக்கு இல்லை என்றால் நாம் தாக்குதல் நடத்தக் கூடாது.

எமது மக்களுக்குத் தற்பாதுகாப்பு வழங்கவே நாம் எமது திறமையைப் பயன்படுத்துகின்றோம்.

கடந்த மே மாதம் 'நிக்கவெரட்டிய பொலிஸ் நிலையத்தைத் தாக்கினோம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணப் பகுதிகளில் உள்ள இராணுவத்தைத் திசைதிருப்ப.

பிரதேசம் முழுவதும் நாம் மக்களைத் திரட்டுகிறோம். தொழிற்சங்கங்களை அமைத்து வருகின்றோம். தோட்டத்தொழிலாளர்கள் மத்தியிலும் அமைப்புக்களை உருவாக்குகின்றோம்.

அவர்கள்தான் எம் போராட்டத்தின் உந்து சக்தி. சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முற்போக்குச் சக்திகளைத் தமிழ் ஈழ ஒலிபரப்பு மூலம் ஒன்று திரட்டுகின்றோம்.

சிங்கள மக்கள் இருட்டில் உள்ளவர்கள். அவர்களுக்கு வகுப்புவாதப் பிரசாரத்தைத்தான் அரசியல்வாதிகள் ஊட்டிவிட்டார்கள். தமிழர்களை, எதிரிகளாக அவர்களுக்குக் காட்டியுள்ளனர்.

அரசாங்கம்முதலாளித்துவ அமைப்பு ஒன்றை உருவாக்குகின்றது,

''தமிழர்கள் தாக்கப் போகின்றார்கள், அழிக்கப் போகின்றார்கள், இந்தியா ஆக்கிரமிக்கப் போகின்றது'- என்று அரசியல் வாதிகள் சிங்கள மக்களுக்கு நஞ்சூட்டியுள்ளார்கள். இதனை மாற்றி அமைக்க வேண்டும்.

நாம் ஏன் போராடுகின்றோம் என்பதை அவர்களுக்கு விளக்க வேண்டும். எமது போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரானது என்பதை அவர்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டும்.

இனப்பிரச்சினையை மட்டும் வைத்து நாம் இந்தியாவின் உதவியை நாடவில்லை. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒரு போராட்டம் என்ற கருத்தில் தான் இந்தியாவின் உதவியை நாடுகின்றோம்.

கேள்வி: இக்கட்டத்தில் இந்தியாவினால் என்ன செய்ய முடியும்?

பதில்: யுத்த நிறுத்த அமுலைச் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இலங்கை அரசை, இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும்.

இராணுவ சமபலம் ஒன்று கொண்டு வரப்

(4ஆம் பக்கம் பார்க்க)

உர வார கட்டுரைப் போட்டி

## முதல் 2 பரிசுகளும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு

யாழ்ப்பாணம், டிச 8

உர வாரத்தை ஒட்டி யாழ் திட்டமிடல் பணிமனை, பாடசாலை மாணவர், மாணவியர் இடையே நடத்திய கட்டுரைப் போட்டியில் முதல் இரு பரிசுகளையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி சுவீகரித்தது.

திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி கனேந்திரன் பொறுப்பாக இருந்து இப்போட்டியை நடத்தினார்.

கட்டுரைப் போட்டி முடிவுகள் வருமாறு:

1ஆவது பரிசு: செல்வி சீத்தா கனகசபாபதி, (500 ரூபா) 9ஆம்ஆண்டு உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வல்வெட்டித்துறை.

2ஆம் பரிசு: செல்வி க. இராஜேஸ்வரி (250 ரூபா) 10ஆம் ஆண்டு உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வல்வெட்டித்துறை

3ஆம் பரிசு: செல்வி பொ. ஸ்ரீபவானி (100 ரூபா) 11ஆம் ஆண்டு தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி.

கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் தேவையான புத்தகங்களை பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அதற்கான பணம் தங்களால் புத்தகசாலைக்கு கொடுக்கப்படும் என்றும் உதவிப் பணிப்பாளர் திருமதி கனேந்திரன் தெரிவித்தார்.

சுவரொட்டிப் போட்டிக்கு தரமான விண்ணப்பங்கள் கிடைக்காதபடியினால் பரிசுக்கு உகந்ததாக எதுவும் தெரிவு செய்யப்படவில்லை.

### பொய்யாமொழி



துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை.

உண்பவருக்கு தக்க உணவுப் பொருள்களை விளைத்துத் தருவதோடு, பருகுவார்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும்.

# தீர்வு ஒன்று கண்டால் இந்தியா தலையிட முடியாது போய்விடும்

## பாலகுமார் சொல்கிறார்

நாம் மாற்று யோசனைகளைச்சமர்ப்பிப்பது, ஜெயவர்த்தனாவிற்கு இரண்டு வழிகளில் உதவுவதாக இருக்கும்.

ஒன்று, ஈழம் கோரிக்கையை நாம் கைவிட்டுவிட்டோம் என்று ஜெயவர்த்தன பிரசாரம் செய்வார்.

இரண்டு, இந்தியாவின் பங்கு வரையறுக்கப்பட்டதாகிவிடும். ஓர் தீர்வு காண பட்டுவிட்டால் பின்னர் அதை நடைமுறைப் படுத்துவதில் இந்தியா தலையிட முடியாத நிலைமையும் ஏற்பட்டுவிடும்.

இப்படி ஈழப் புரட்சிகர அமைப்பு (ஈரோஸ்) பிரமுகர் திரு. வி. பாலகுமார் 'புரொன்ட்லைன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டார்.

பேட்டி விவரம் வருமாறு:

கேள்வி: 'ஈழம்' பற்றிய வெளிப்பார்வை இன்று எப்படி உள்ளது?

ஈழம் தேசிய விடுதலை முன்னணி சமர்ப்பித்துள்ள நான்கு முக்கிய கோரிக்கைகளுக்கு ஆதரவாக, 'தமிழ் ஈழம்' கோரிக்கையை கைவிட்டு விட்டீர்களா?

உங்கள் அமைப்பு தோட்டத் தொழிலாளர் விஷயத்தில் அதிக அக்கறை காட்டுவது ஏன்?

பதில்: 1984 வரை ஈழம் பிரச்சினை வடமாகாணத்துக்குள் மட்டுமே அடங்கி இருந்தது.

நடுத்தர மக்களைத் தாக்கிய இன வன்செயல்கள் தரப்படுத்தல் முறை ஆகியவையே இதற்குக் காரணம். இராணுவ ரீதியில் இளைஞர்கள் வடபகுதியில் மட்டும் செயல்படத் தொடங்கினர்.

சர்வகட்சி மாநாட்டிலும் வடபகுதி சுயாட்சி பற்றியே பிரதானமாகப் பேசப்பட்டது. 'சி' இணைப்பிலும் இந்திய அரசாங்கத்தின் ஆலோசனையிலும் இக்கருத்துத்தான் பிரதிபலித்தது.

ஜெயவர்த்தனவும்வடபகுதிக்கு சில சுயாட்சி உரிமைகளை வழங்க எண்ணினார். பின்னர் அதிலும் பின்வாங்கினர்.

ஈரோஸ் அமைப்பைப் பொறுத்தவரையில், இதை ஒரு முறையான அரசியல் நடவடிக்கையாகக் கருதவில்லை.

எல்லாத் தமிழ் மக்களின் பிரச்சினைகளும் பகிரங்கமாக்கப்படுவதையே ஈரோஸ் விரும்பியது.

அரசியல் கவனத்தைக் கிழக்குக்குத் திருப்புவதற்கு உரிய அடித்தளத்தை அமைக்க, ஈரோஸ் தோட்டப் பகுதிகளில் பணிபுரியத் தொடங்கியது.

1984 இன் பின்னர் எமதுஅரசியல் இராணுவ நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி உள்ளோம்.

கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகளை வெற்றிகரமாகச் செய்துமுடித்துள்ளோம்.

தாக்கிவிட்டு ஓடும் தந்திரத்தின் அடிப்படையில் அல்லது புதிய தந்திரங்களைக் கையாண்டே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இலங்கைஆயுதப்படையினர் கிராமங்களுக்குச் சென்று திரபராதிகளான குடிமக்களை, பெண்களைத் துன்புறுத்தி, மானபங்கஞ் செய்கையில் நாம் சில பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கின்றோம்.

நாம் இராணுவத்தை ஆத்திரமடையச் செய்வது இல்லை. மக்களைத் துன்புறுத்தவிட்டு முகாம்களுக்குத் திரும்புகையில் நாம் பதுங்கி இருந்து இராணுவத்தைத் தாக்குகின்றோம்.

இதன் காரணமாக மாற்று வழி இன்றி இராணுவத்தினர் தாக்கும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

மக்களைத் துன்புறுத்திவிட்டுத் தப்பமுடியாது: திருப்பித் தாக்கப்படுவோம் என்பதை இராணுவத்தினர் எமது நடவடிக்கைகள் மூலம் உணர்ந்துவிட்டனர்.

இது ஈரோஸ் இயக்கத்துக்கு மக்கள்மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

வடமாகாணத்தில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளுக்கு முற்றிலும் வித்தியாசமாக இது அமைகின்றது.

அரசியல் ரீதியில், தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஒற்றுமையை நிலைநாட்டுவதில் ஈரோஸ் பணியாற்றுகின்றது.

இதில் நாம் ஓரளவு வெற்றி கண்டுள்ளோம் என்று பெருமையுடன் கூறக்கூடியதாக இருக்கின்றது.

இரண்டு இனங்களுக்கும் இடையே பிரச்சினைகளை உருவாக்கும் சக்திகளை நாம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடியதாக உள்ளது.

அரசாங்கத்தின் சிவில் நிர்வாகம் முழுதாகக் குழம்பியுள்ளது. இந்த நிலையில் பிரதேச மக்கள் உதவியுடன் சமமான நிலையில் சிவில் ஒழுங்கை ஸ்திரப்படுத்தி வருகின்றோம்.

பிரதான விஷயம், எமது தாயகமான வடக்கு - கிழக்கு இணைப்புத்தான்.

தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள் நிலை குறித்தே நாம் இப்பொழுது கவனஞ் செலுத்துகின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து தோட்டப் பகுதிகளையும் நாம் இணைக்க வேண்டும்.

ஆகவேதான் இலங்கை இந்தியப் பிரஜா உரிமைச் சட்டத்தை எதிர்த்து நவம்பர் 15இல் ஹர்த்தால் நடத்தினோம். ஹர்த்தால் வெற்றியாக முடிந்தது. 5லட்சம் மலையகத் தமிழர்கள் இன்று நாடற்றவர்களாக உள்ளனர்.

எம்மைப் பொறுத்தவரையில் ஈழத்தின் முக்கிய விஷயம் மலையகத் தொழிலாளர் பற்றியதுதான்.

வடக்கு, கிழக்குடன் மலையகத் தமிழரின் தாயகம் மலைநாடு என்பதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

இந்த விஷயத்தில் நாம் கவனஞ் செலுத்த வேண்டும்.

ஈழம் கோரிக்கைக்கான காரணங்களை நாம் வெளிப்படுத்தி உள்ளோம்.

எமது அரசியல் இலட்சியத்தை அடைய நாம் புதிய முறையிலான அரசியல், ராணுவ தந்திரங்களைக் கையாள இருக்கின்றோம்.

இந்த நிலையில் நாம் ஈழம் கோரிக்கையைக் கை விட்டுவிட்டோமா, இல்லையா? என்ற கேள்விக்கே இடமில்லை.

பருத்தித்துறையில் இருந்து பதுளை வரை, மன்னாரில் இருந்து மட்டக்களப்பு, பொத்துவில் வரை எமது தாயகமே.

ஆகவேதான் நாம் இதை ஈழம் என்று அழைக்கின்றோம்.

மலையகத் தமிழர், வடக்கு-கிழக்குத் தமிழர் அனைவரும் தனித்துவமான தேசிய இனம்.

இந்த மூன்று பகுதியினரும் இணைந்து இலட்சியம் நிறைவேறப் போராட வேண்டும் என்று ஈரோஸ் நம்புகின்றது.

மலையகத் தமிழர்கள் தங்கள் அடிமைவிலங்கை அறுத்துச் சுதந்திரம் பெற வேண்டும்.

கேள்வி: புதுடில்லியில் இருந்து ஈழம் தேசிய விடுதலை முன்னணி திரும்பிய பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் கூறினர்கள்:-

''ஆறு அமைப்புக்களின் அபிப்பிராயங்களை மையமாக வைத்து இந்தியா ஒரு திட்டத்தைத் தயாரிக்க இருப்பதாக'' இது பற்றி விபரிப்பீர்களா?

பதில்: ஈ. தே. வி. மு. மாற்று யோசனைகள் சமர்ப்பிப்பதற்கும், இலங்கை அரசாங்கம் இராணுவ பலத்தைப் பெருக்குவதற்கும் ஒரு தொடர்பு உண்டு என்று ஈழம் தேசிய விடுதலை முன்னணி திடமாக நம்புகின்றது.

மாற்று யோசனைகள் சமர்ப்பிப்பதற்கு இது அல்ல தருணம் என்று நாம் இந்திய அரசிடம் தெட்டத்தெளிவாகக் கூறிவிட்டோம்.

ஈழம் கோரிக்கைக்கான சூழ்நிலையில் இன்னும் மாற்றம் ஏற்படவில்லை என்றும் நாம் இந்திய அரசிடம் கூறிவிட்டோம்.

வேறு எவராவது தமிழர் அபிலாஷைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த முன் வந்தால் அதற்கு நாம் குந்தகமாக இருக்கமாட்டோம் என்று கூறியுள்ளோம்.

எங்கள் எண்ணங்கள் குறித்து இந்திய அரசுடன் எச்சமயமும் பேசத் தயாராக உள்ளோம்.

இந்திய அரசு தீர்வுக்கான யோசனைகள் அடங்கிய திட்டம் ஒன்றைத் தயாரிப்பது பற்றி எமக்கு எதுவும் தெரியாது. அது குறித்து நாம் விமர்சிக்க முடியாது.

ஓரளவாவது தமிழர் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்குரிய யோசனைகளை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

பிரச்சினையை உருவாக்கிய இலங்கை அரசே தீர்வையும் காண வேண்டும்.

எப்படியான நீதி கிடைக்க வேண்டும் என்றுபாதிக்கப்பட்டவர்கள் கூறிவிட்டார்கள்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவிற்குச் சில சமயம் நாம் இடைஞ்சலாக இருக்கலாம் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

பிரதமர் ராஜீவ்காந்தி கூறியது போல, தமிழ் மக்கள் கௌரவமாக, பாதுகாப்பாக, சுயமரியாதையுடன் வாழக் கூடிய நியாயமான தீர்வையே இந்தியஅரசும் நாமும் விரும்புகின்றோம்.

கேள்வி: இலங்கை அரசின் நகல் செயல் திட்ட யோசனைக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

## சமய சந்திகளில்

சாவகச்சேரி, டிச. 8

தமிழினத்தின் சுபீட்சத்திற்காகவும் நாட்டில் அமைதியும் சாந்தியும் நிலவுவதற்காகவும் துயர்கள் நீங்கி சகல நன்மைகளும் பெருகுவதற்காகவும் சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் அம்பலவாண விரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை 9 ஆம் திகதி திங்கட்கிழமை கணபதி ஹோமம் நடைபெற இருக்கிறது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் பல சிவாசாரியர்கள் உதவியுடன் இதுநடைபெறும். பிரார்த்தனை, கூட்டு வழிபாடு ஆகியனவயும் இடம்பெற ஏற்பாடாகி இருக்கிறது.

சகல விதமான தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்) றோனியோ வேலைகட்கும்
**Teens Copy**
514|14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
"TEENS COPY"

# உதயன்
8 - 12 - 1985

A/L Day Class
ஆரம்பம்: 9 — 12 — 1985
BOND INSTITUTES
274|2, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
BOND INSTITUTES

# மட்டக்களப்பில் வீதி ஓர மதில்கள் உடைப்பு

யாழ்ப்பாணம், டிச 8
மட்டக்களப்பு வீதி ஓரத்தில் உள்ள பல மதில்கள் உடைக்கப்படுகின்றன. வேலிகள் பிடுங்கப்படுகின்றன.

பாதுகாப்புப் படையினர், பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**கரடியனாற்றில்**

மட்டக்களப்பு கரடியனாறு கிராமத்தில் நேற்று அதிகாலை ஆயுதப்படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின் போது குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டார். 25 பேர் கைது செய்யப்பட்டனர். மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

நேற்று சனிக்கிழமை அதிகாலை 2 மணிக்கு ஆயுதப்படையினர் கரடியனாறு கிராமத்தைச் சுற்றி வளைத்தனர். தேடுதல் வேட்டை நடத்தினர். இது நண்பகல் 12 மணிவரை நீடித்தது.

ஆயுதப்படையினரின் தேடுதலையடுத்து கிராமம் அல்லோலகல்லோலப்பட்டது.

தேடுதல் வேட்டையின்போது கைது செய்யப்பட்ட 25 பேர் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

## பொது மலசலகூட பாவனைக்கு கட்டணம்
### நல்லூரில் பரீட்சார்த்தம்

நல்லூர், டிச. 9
யாழ்.மாநகரசபை பகுதியில் உள்ள பொது மலசல கூடங்களை உபயோகிப்பதற்கு கட்டணம் அறவிடும் பரீட்சார்த்த திட்டம் ஒன்று மிகவிரைவில் அமுல் செய்யப்பட இருக்கிறது.

மாநகரசபைக்குட்பட்ட முக்கிய இடங்களில் உள்ள மலசலகூடங்களில் மலசலம் கழிக்க விரும்புவோர் இனிமேல் 25 சதம் செலுத்தியே தமது தேவையை நிறைவேற்றிக்கொள்ளவேண்டும்.

நல்லூர் பொது மலசல கூடத்தில் முதல் முறையாக இப்பரீட்சார்த்த திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது. இதற்கென பிரத்தியேகமாக ஒருஊழியரும் அங்கு அமர்த்தப்படுவார்.

இத் திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் மாநகர சபை முழுவதற்கும் இத்திட்டம் செயற்படுத்தப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

## கல்முனை — யாழ் வார இறுதி பஸ் சேவை

அம்பாறை, டிச. 8
கல்முனையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான வார இறுதி பஸ் சேவையைத் தற்பொழுது கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபை நடத்தி வருகின்றது.

ஏற்கனவே தினசரி சேவையாக இந்த பஸ் சேவை நடைபெற்று வந்தது. எனினும் தற்பொழுது வார இறுதிச் சேவையாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கல்முனையிலிருந்து பிரதி சனிக்கிழமையும் காலை 5-30 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவை நடைபெறுகின்றது.

குறித்த பஸ் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து கல்முனைக்குப் புறப்படுகிறது.

## மட்டக்களப்பில் வெள்ளம் வடிந்தது

மட்டக்களப்பு, டிச. 8
கடந்த வெள்ளிக்கிழமை பெய்த மழையால் மட்டக்களப்பில் ஏற்பட்ட வெள்ளம் வடிந்தது.

போக்குவரத்து ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பின.

## மயிலிட்டி மீனவர் விசாரணையின் பின் விடுதலை

காங்கேசன்துறை டிச. 8
ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்ற சமயம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 4 மீனவர்களும் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

மயிலிட்டியைச் சேர்ந்த இ. வேலும் மயிலும், ஐ. நடராசா, கா. கடாச்சரம், தா. தர்மலிங்கம் ஆகியோரே விடுதலையான மீனவர்கள் ஆவர்.

காங்கேசன்துறை இராணுவ முகாமுக்கு முதலில் கொண்டு செல்லப்பட்டு பின்பு பலாலிக்கும், யாழ் கோட்டைக்கும் இவர்கள் கொண்டு செல்லப்பட்டனர்.

பலத்த விசாரணையின் பின் இவர்கள் 4-12-85 இல் விடுதலை செய்யப்பட்டனர்.

ஏற்கனவே வெவ்வேறு இடங்களில் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்ட எஸ் இராசேந்திரம் (இளவாலை) எஸ். கருணாகரன் (சுதுமலை) ஆகியோரும் இவர்களுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்களிடம் கைப்பற்றப்பட்ட படகும் உபகரணங்களும் இராணுவ பாதுகாப்பிலேயே தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளன.

## லியா இலங்கை வருகிறார்

யாழ்ப்பாணம், டிச.8
செவ்வாய்க் கிழமை பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா — உல் — ஹக் கொழும்பு வருகின்றார்.

அவரது விஜயத்தை ஒட்டி,கொழும்பு வீதிகள் சில தடை செய்யப்பட்டு ஞாயிறு பாதுகாப்பு ஒத்திகை நடைபெறும்.

கண்டி, அநுராதபுரம், ஜெயவர்த்தனபுர நாடாளுமன்றம், அக்குறணை ஆகிய இடங்களுக்கும் ஜனாதிபதி விஜயம் செய்வார்.

# விளையாட்டரங்கு

# 1992-ஒலிம்பிக் போட்டி இந்தியாவில் நடக்குமா?
## பகிஷ்கரிப்பைத் தடுக்க இது வழியாம்

பஹ்ரைன், டிச.7
1992-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் இந்தியாவில் நடைபெறலாம்.

இப்போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கு அனுமதி தரும்படி இந்தியா கோரிக்கை விடுத்திருக்கிறது.

பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய ஒலிம்பிக் சம்மேளனத்தின்கூட்டத்திலேயே இந்தியா இக் கோரிக்கையை விடுத்திருக்கிறது.

அண்மைக்காலத்தில் ஒவ்வொரு முறையும் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றபோது அரசியல் வேறுபாடுகள் காரணமாக பல நாடுகள் அவற்றைப் பகிஷ்கரித்து வந்திருக்கின்றன.

மொண்ட்ரியல் (1976) மாஸ்கோ (1980), லொஸ்ஏஞ்சல்ஸ் (1984) ஆகிய இடங்களில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளிலும் பகிஷ்கரிப்புகள் இடம்பெற்றன.

இதனால் ஒலிம்பிக் உலகம் பல சாதனை வீரர்களை இழந்தது.

இதனை மாற்றி சுமுகமான நிலையில் சகல நாடுகளும் கலந்து கொள்ளும்வாய்ப்பான நிலைமை தோன்ற— இந்தியாவை ஒலிம்பிக் களமாகக் கொள்வது உதவும்என்று கூறப்படுகிறது.

இந்தக் கருத்து ஆசிய ஒலிம்பிக் சம்மேளனக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

1982-ஆம் ஆண்டு நடைபெற்ற ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளை இந்தியா சிறப்பாக நடத்திக் காட்டியது.

இச்சாதனை இந்தியா ஒலிம்பிக் போட்டிகளை சிறப்பாக நடத்தும் என்பதற்கு உறுதியளிப்பதாக இருக்கிறது என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை 1992 ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கு பேர்மிங்ஹாம்,பாரிஸ்,சோவியா, பிரிஸ்பேர்ன், அம்ஸ்டர்டாம், பார்சிலோனா, பெல்கிரேட் ஆகிய நகரங்களும் விண்ணப்பித்திருக்கின்றன.

1992 ஒலிம்பிக் போட்டியை நடத்தும் அனுமதிஎந்தநாட்டிற்குவழங்குவது என்பது குறித்து உலக ஒலிம்பிக் சம்மேளனம் அடுத்த ஆண்டு அக்டோபரிலேயே தீர்மானிக்கும்.

## ஸ்கந்தா வெற்றி

சுன்னாகம் டிச. 8.
இளவாலை அந்தோனியார் கழகத்திற்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி இரண்டாம் பிரிவு அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ ஆட்டத்தில் கல்லூரி அணி 6-0 கோல்களால் வெற்றிபெற்றது.

திரு. எஸ். ஸ்கந்தகுமார் ஆட்டத்திற்கு மத்தியஸ்தம் வகித்தார்.

## மன்னாரில் 2680 தமிழ் அகதிகள்

யாழ்ப்பாணம், டிச.8
மன்னாரில் 2680 தமிழ் அகதிகள் மூன்று முகாம்களில் தற்பொழுது உள்ளனர்.

பேசாலை முகாமில் 680 பேரும் திருக்கேதீஸ்வரம் முகாமில் 720 பேரும் மடு தேவாலய முகாமில் 1280 பேரும் அகதிகளாக உள்ளனர்.

மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச்சங்கத்தினர், அகதிகளுக்குத் தேவையான நிவாரண உதவிகளைச் செய்து வருகின்றனர்.

இத்தகவலை சங்கச்செயலாளர் திரு. சிங்க்ளர் பீட்டர் உதயனுக்குத் தெரிவித்தார்.

மன்னாரில் இடம்பெற்ற வன்செயல்களில் 212பேர் இறந்து விட்டனர். அவர்களை நம்பியுள்ளோருக்கு தொழில்களை ஆரம்பிக்க மன்னார் துயர் துடைப்புச் சங்கம் வட்டியில்லாக் கடன் வழங்குகின்றது. என்ற தகவலையும் சங்கச் செயலாளர் திரு. பீட்டர் சொன்னார்.

## போர் நிறுத்தம் ஒரு சதித்திட்டம்

யாழ்ப்பாணம், டிச.8
ஜே. ஆரின் போர் நிறுத்தம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சீர்குலைக்கும் பயங்கர சதித் திட்டம்.

இந்தத் தலைப்பில் ஈழப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய செயற்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

ஈழத்தில் ஆயிரக்கணக்கில் சுட்டுக் கொல்லப்பட்டவர்களுக்கும் அங்கமிழந்து அனாதைகளாகி அகதிகளாக ஆக்கப்பட்டவர்களுக்கும் சூறையாடப்பட்டும் தீக்கிரையாக்கப்பட்டும் தமிழ் மக்கள் இழந்துள்ள பல கோடி சொத்துக்களுக்கும் உடைமைகளுக்கும் என்ன பதில்?

—இப்படி அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

## எமக்கு இராஜதந்திர அந்தஸ்து....

(3ஆம் பக்க தொடர்ச்சி)

பட்டால் ஒழிய, நாம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று நான் பண்டாரியிடம் கூறி விட்டேன்.

நாம் இராணுவத் தலையீட்டைக் கோரவில்லை. இந்தியா சர்வதேச ரீதியில் உதவ வேண்டும்.

பாலஸ்தீன விடுதலை இயக்கம் தென் ஆபிரிக்க காங்கிரஸ், நமீபியா விடுதலை இயக்கம் ஆகியவற்றிற்குராஜதந்திர அந்தஸ்து வழங்கியது போன்று, எமக்கும் இந்தியா ராஜதந்திர அந்தஸ்து வழங்க வேண்டும். ஆயுதங்களையும் வழங்க வேண்டும்.

கேள்வி:

இராணுவ சமபலம் இருக்க வேண்டும் என்று நீங்கள் கூறுவதன் அர்த்தம் இலங்கை இராணுவத்துக்கு சமநிலையில நீங்கள் இருக்க வேண்டும் என்பதா?

பதில்:

ஆம். இராணுவ சமபலம் அவசியமானது. இலங்கை அரசு திரும்பத் திரும்பத் தாக்குகின்றது. நாம் பலவீனமானவர்கள் என்று இலங்கை அரசு அறிந்து வைத்திருப்பதே இதற்குக் காரணம். நாம் வலியுறுத்தலாம் அல்லது உட்கார்ந்து உண்ணாவிரதம் இருக்கலாம்.

இதைத்தான் நாங்கள் ஆகக்கூடியது செய்வோம் என்று இலங்கை அரசுக்குத் தெரியும்.

எந்த நேரத்திலும் அவர்கள் எம்மை நசுக்கலாம்.

ஆகவே எம்மிடம் சக்தி இருந்தால்...

கேள்வி:

தமிழ் அமைப்புக்கள் மாற்று யோசனைகள் சமர்ப்பிக்க முன்வராத நிலைதான், பேச்சுவார்த்தையில் உள்ள ஒரு பிரச்சினையாகத் தெரிகின்றது.

நகல் செயல் திட்ட யோசனைகளை நிராகரித்த நீங்கள், மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்க முடியாதா?

பதில்:

பேச்சுவார்த்தைக்கு என்று சென்றால், அடுத்த நடவடிக்கை பற்றியும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

பேச்சுவார்த்தைக்குப் போய்விட்டு தமிழ் ஈழம் கொள்கையில் இருந்து கீழே இறங்க முடியாது என்று கூற முடியாது.

மாற்று யோசனைகளைச் சமர்பபிக்க நாம் தயாராக உள்ளோம்.

இலங்கை அரசு, பிரச்சினையைத் தீர்ப்பதில் உண்மையான அக்கறை காட்டினால்தான் நாம் மாற்று யோசனைகளைச் சமர்ப்பிப்போம்.

நவீன ஆயுதங்களை வாங்கி இராணுவத்தைப் பலப்படுத்துவதிலேயே இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைக் காலத்தைப் பயன்படுத்துகின்றது.

இலங்கை அரசு, நமது மக்களைத் தாக்குகின்றது. சொந்தப் பிரதேசங்களில் இருந்து அவர்களை விரட்டி அடிக்கின்றது.

பிரச்சினையைத் தீர்ப்பதில் உண்மையான அக்கறை இருப்பின் இலங்கை அரசு இவற்றை நிறுத்த வேண்டும்.

கேள்வி:

மாற்றுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளீர்களா?

பதில்:

'சி' இணைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் யோசனைகள் ஆகியவற்றை நாம் படித்துள்ளோம்.

இந்த இரண்டையும் இணைக்க வேண்டும் என்பதுதான் நமது சிந்தனை.

இத்துடன் வேறு சிலவற்றையும் சேர்க்கவேண்டும். தோட்டத் தொழிலாளர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் முஸ்லிம்கள் பற்றியவை அவை.

இவர்களுக்கு 'கான்டன்' மாதிரி அமைப்பு ஒன்றை உருவாக்கவேண்டும் என்று யோசனை தெரிவித்துள்ளோம்.

யுத்த நிறுத்தம் சரியாக அமுல் நடத்தப்படும்வரை நாம் இந்த யோசனைகளைச் சமர்ப்பிக்க மாட்டோம்.

கேள்வி:

வடக்கு – கிழக்கு இணைப்பு கோரிக்கை பேசித் தீர்க்கக்கூடிய ஒன்று இல்லையா?

பதில்:


வடக்குக்கு ஒரு மாகாணசபை கிழக்குக்கு ஒரு மாகாணசபை முறையை நாம் ஏற்றுக் கொண்டால், ஒரு வருடத்தில் கிழக்கு மாகாணமே பறி போய் விடும்.

அரசாங்கம் திட்டமிட்டு நடத்திய குடியேற்றத் திட்டங்களினால் கிழக்கு மாகாணத்தின் இனரீதியான அமைப்பு முறை மாற்றப்பட்டு விட்டது. புதிய குடியேற்றத் திட்டங்களைத் தடுத்து நிறுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

குடியேறியவர்களை வெளியேற்றுவதும் இயலாத காரியம்.

ஆகவே வடக்கு, கிழக்கு இணைப்புத்தான் ஒரே வழி.

பேட்டிகண்டவர்:
**மாலினி பார்த்தசாரதி**




## விற்பனைக்கு

**வீட்டுடன் கூடிய காணி, விடு கட்ட உகந்த காணிகள்**

- நல்ல நீர்வளம், மண்வளம்
- துர்க்கை அம்மன் கோவில் அருகில்
- மல்லாகம் பழைய சோடா கம்பெனிக்கு அருகில்
- சகல வசதிகளுக்கும் இலகு

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
த ஷப்ரு புனிக்கோ பினான்ஸ் லிமிடெட்
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## தீர்வு ஒன்று...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

மாற்று யோசனையை நீங்கள் சமர்ப்பிக்கவில்லை என்று பிரதமர் ராஜீவ் காந்தி கூறியுள்ளாரே! மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்க உங்களுக்கு எது தடையாக உள்ளது?

பதில்: ஏற்கனவே கூறியது போல இலங்கை அரசு இராணுவ பலத்தைப் பெருக்குவதும், நாம் மாற்று யோசனைகளைச் சமர்ப்பிப்பதற்கும் தொடர்பு உண்டு.

இரண்டு நோக்கங்களை அடைய இலங்கை அரசு விரும்புகின்றது.

ஒன்று மேற்கு நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காக அரசியல் தீர்வுஒன்றில் நாட்டம் இருப்பதாக உலகத்திற்கு எடுத்துக்காட்டுவது.

இரண்டாவது இந்திய அரசுக்கும் ஈழம் தேசிய விடுதலை முன்னணிக்கும் இடையில் கருத்து வேற்றுமையைக் கொண்டு வருவது.

யோசனைகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் அரசியல் தீர்வில் நாட்டம் இருப்பதாக உலகத்திற்கும் இந்தியாவிற்கும் காட்டுவது; அரசியல் ரீதியிலான நடவடிக்கை.

திம்பு மாநாட்டில் வைக்கப்பட்ட யோசனைகளைத் தமிழ் மக்கள் நிராகரித்து விட்டார்கள்.

அந்த நகல் யோசனைகளுக்கும் தமிழர் அபிலாஷைகளுக்கும் இடையே பெரும் இடைவெளி உள்ளது.

அரசியல் தீர்வில் ஜெயவர்த்தனவிற்கு நாட்டம் இல்லை என்பது இதில் இருந்து விளங்குகின்றது. மாற்று யோசனைகளை நாம் சமர்ப்பிக்காதது, இந்திய அரசுக்கு இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தி உள்ளது.

இதை வைத்து எமக்கும் இந்திய அரசுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தலாம் என்று ஜெயவர்த்தன நினைக்கின்றார்.

இராணுவ ரீதியில இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே எதுவித தொடர்பும் இல்லை.

இந்திய வெளிநாட்டுக் கொள்கையை எதிர்க்கும் இஸ்ரவேல், தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான் நாடுகளில் இருந்து ஜெயவர்த்தன ஆயுதங்களை வாங்குகின்றார்.

பஹாமாஸில் ராஜீவைச் சந்தித்து அரசியல் தீர்வு பற்றிப் பேசும் ஜெயவர்த்தன, மூன்று தினங்களின் பின்னர் ரகசியமாக பிரான்ஸில் இஸ்ரவேல் பிரதமரைச் சந்தித்து இராணுவ உதவி பற்றிப் பேசியிருக்கின்றார்.

ஜெயவர்த்தனவின் நிலையில் எத்தனை வித்தியாசம், பாருங்கள்!

அடுத்த அடிப்படைக் காரணம் மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்கக் கூடியசூழ்நிலை இப்போது இல்லை. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்ட விதிகள், தொழிற்சங்கக் கட்டுப்பாடு முதலியவற்றை நீக்கி உகந்த சூழ்நிலையை இலங்கை அரசுதான் உருவாக்க வேண்டும்.

தமிழ், சிங்கள அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

கேள்வி: வடக்கைச் சேர்ந்த சிறுபகுதியினர் தான் ஈழம்கோரிக்கையை ஆதரிக்கின்றார்கள்.

வெளியில் வாழும் தமிழ் மக்களும் மலையகத் தமிழரும் எதிர்க்கின்றார்கள் என்று ஜெயவர்த்தன பஹாமாஸில் வைத்துச் சொல்லியிருக்கிறாரே!

பதில்: அது உண்மையானால், எம்முடன் பேச வேண்டிய தேவை அவருக்கு இல்லையே. எங்களுடன் பேசுவதற்கு ஏன் இவ்வளவு அவர் கஷ்டப்பட வேண்டும்?

எமது பிரதேசத்தில் எமக்கு பூரண ஆதரவு உண்டு என்பதைத்தான் இது காட்டுகின்றது.

பேட்டி கண்டவர்:
**ரி. எஸ். சுப்பிரமணியன்**

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**எழுதுவினைஞர் பதவி (ஆண்)**

- 20 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- விளையாட்டுத்துறை தகைமைகள், கல்வி கற்ற பாடசாலை ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

**டைப்பிஸ்ட் (பெண்)**

- பிரபல நிறுவனங்கள் ஏதாவது ஒன்றில் குறைந்தபட்சம் மூன்று வருட முன் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**கார் டிரைவர்**

- 25 தொடக்கம் 35 வயதுடையவராகவும், கார் ஓட்டுவதில் முன் அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விளம்பர இல. 5, மே.பா.'உதயன்', தபாற் பெட்டி எண்: 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பத்தை அனுப்பவும்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த-ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் வெளியிட்ட திகதி: 8-12-1985